[31st October 1958

SRI M. P. SARATHI : சிறையில் இறப்பதற்குக் காரணமாக இருந்தவர்கள் சிறை அதிகாரிகளும் டாக்டர்களுக்குந்தானே என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சிறையில் இருக்கிறவர்களைப் பொறுத்தமட்டில், அங்கேயுள்ள வைத்தியர்கள் வேண்டிய கவனம் செலுத்தித்தான் வருகிறார்கள். சிறையில் இறந்ததற்கு அவர்கள் ஒருக்காலும் காரணம் அல்ல.

Madras Catering Establishments Act, 1958

* 757 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the cause for the delay in publishing the Rules made under the Madras Catering Establishments Act, 1958 (Madras Act XIII of 1958) ;

(*b*) whether the Act has come into force in all parts of the State; and

(*c*) if so, from when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The drafting of the Rules was taken up immediately the Act was passed by the Legislature. The Draft is being finalised and will be published for eliciting public opinion shortly. There has been no avoidable delay in the matter.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

MR. SPEAKER : I have got only five minutes more and there are at least ten more questions.

Appointment of High Court Judges

*758 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஹைகோர்ட் நீதிபதிகளாக தேர்ந்தெடுக்க யார் யாருடைய பெயர்களை மத்திய சர்க்காருக்கு சிபாரிசு செய்யப்பட்டது ? அல்லது எழுதப்பட்டது ?

(ஆ) அப்படி சிபாரிசு செய்துள்ளவர்களின் யோக்கியதாம்சங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I decline to answer the question on the ground that it would be against the public interest.

Bentonite

MR. SPEAKER : The hon. Member, Sri V. Sankaran, is absent. The question and the answer will be printed in the official proceedings.

* 759 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) the properties and uses of Bentonite ;

(*b*) its present market price ;

31st October 1958]

(*c*) how far it would be useful and how much of it could be used with advantage in the small, heavy and cottage industries in the State;

(*d*) an estimate of the return that this State may get annually from the said quarry of Bentonite; and

(*e*) Whether the Government propose to acquire and work the quarry or mine by themselves?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) *to* (*e*) The answer [a] is printed and placed on the table of the House.

Bhagyalakshmi Mills

* 760 *Q*.—SRI P. S. CHINNADURAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the reasons for the closure of the Bhagyalakshmi Mills at Pollachi;

(*b*) the steps taken by Government to re-open the Mills; and

(*c*) the help, if any, given to the workers as a result of the above closure?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*c*) The attention of the hon. Member is invited to the answer given by Minister for Industries on 11th February 1958 in reply to starred question No. 48 asked by the hon. Member Sri N. K. Palanisami on behalf of the hon. Member.

(*b*) No steps could be taken to re-open the mills because the Government can neither compel the management to re-open the mills nor can they take over such mills.

SRI P. S. CHINNADURAI: நாட்டில் உற்பத்தியைப் பெருக்குகிற முறையிலே பயன்படக்கூடிய ஆலையை முதலாளிகள் அனாதைக் குழந்தைகளைப்போல் விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள். அதை அரசாங்கம் ஏன் எடுத்து நடத்துவதற்கு முன்வரக்கூடாது? அரசாங்கம் நேரடியாக எடுத்து நடத்த முன்வராவிட்டாலும், அதற்கு உரிய வேறு நபர்களைத் தெரிந்தெடுத்தாவது அவர்களுக்கு உதவிசெய்து அதன் மூலம் ஆலைகளை நடத்துவதற்கு ஏன் முன்வரக் கூடாது என்று கேட்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: பல காரணங்களால் வெற்றிகரமாக நடத்தப்பட முடியாத மில்களையெல்லாம் அரசாங்கம் ஏற்று நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், எந்தத் தனி நபர்கள் அல்லது கம்பெனியார் வந்தாலும் அரசாங்கம் வேண்டிய ஆதரவை அளிக்கும். தாங்களே நடத்தக் கூடுமா என்பதை அவ்வப்போது அரசாங்கம் பரிசீலனை செய்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு தான் வருகிறார்கள். இந்த மில்லைப் பொறுத்த வரையில், இது திறக்கப்பட்டு வேறு ஒரு தொழிலாக இது மாற்றப்பட இருக்கிறது. அது நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

a Printed as Appendix V on pages 272–273 infra.